தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066




dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253
நமது தினகனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்








| Vol: 02 | Issue: 224 | 4 Pages | 12.3.225 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 224 | 4 பக்கங்கள் | 12.3.225 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

**நாளென ஒன்றுபோற் காட்டி உயிரீரும்**
**வாள துணர்வார்ப் பெறின்**

**விளக்கம்:**
வாழ்க்கையை ஆராய்ந்து உணர்வாரைப் பெற்றால் நாள் என்பது ஒரு கால அளவுகோல்காட்டி, உயிரை உடம்பிலிருந்து பிரித்து அறுக்கும் வாளாக உள்ளது.

# புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற பணிகள் திறப்பு; ரூ.1,285 கோடியில் 50ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகள்

## செங்கல்பட்டில் நடந்த விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்

செங்கல்பட்டு, மார்ச்.12

செங்கல்பட்டில் ரூ.1,285 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற திட்டப் பணிகளைமுதல்வர்மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். பின்னர் 508 கோடி செலவில்50ஆயிரம்பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசினார். தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், திராவிட மாடல் ஆட்சியில் 4 ஆண்டுகளாக நிறைவேற்றி வரும் பல்வேறு திட்டங்கள் மூலம் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்பட்டுள்ளவளர்ச்சி,முன்னேற்றம் தொடர்பாக அந்தந்த மாவட்டங்களுக்கு நேரடியாக சென்று களஆய்வு செய்து வருகிறார். இதன் தொடர்ச்சியாக, செங்கல்பட்டு மாவட்டத்தில் ரூ.1285 கோடியில் புதிய திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல், முடிவுற்ற திட்டப்பணிகளைதிறந்து வைத்தல், நகர்ப்புற பகுதிகளில் பட்டா வழங்கும் திட்ட தொடக்க விழா இன்று காலை 11 மணிக்கு மாவட்ட கலெக்டர்அலுவலக வளாகத்தில் நடந்தது.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று காலை காரில் புறப்பட்டார். அவர் செல்லும் வழியில் திருக்கழுக்குன்றத்தில் ''ரோடு ஷோ'வுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டார். திருக்கழுக்குன்றம் அடுத்த கொத்திமங்கலம் கூட் ரோட்டில் காரில் வந்து முதல்வர் இறங்கியதும், திருக்கழுக்குன்றம் வடக்கு ஒன்றிய செயலாளர் வீ.தமிழ் மணி, பேரூர் திமுக செயலாளர் ஜி.டி.யுவராஜ், திருப்போரூர் ஒன்றிய செயலாளர் எல். இதயவர்மன், திருக்கழுக்குன்றம் ஒன்றிய சேர்மன் ஆர்.டி.அரசு,



துணை சேர்மன் எஸ்.ஏ.பச்சையப்பன் ஆகியோர் தலைமையில் முதல்வருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்த மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் திருப்போரூர் தொகுதியிலிருந்து 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர். பின்னர் சாலை மார்க்கமாக நடந்து சென்று பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றார். சாலையின் இருபுறமும் நின்றிருந்த ஆண்கள், பெண்கள் என பலரும் முதல்வருக்கு கைகுலுக்கி உற்சாக வரவேற்பு அளித்தனர். நரிக்குறவர்கள்பாசத்துடன்வழங்கிய பாசிமணிகளை முதல்வர் பெற்று கொண்டார். கிறிஸ்தவ தேவாலயத்தில் பாதியார் சாம்சன் ராஜா, முதல்வருக்கு மாலை மற்றும்சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர். சுமார் 3 கிலோமீட்டர்தூரம் நடந்தே சென்று பொதுமக்களிடம் முதல்வர் மனுக்களை பெற்றார். அந்த நேரத்தில் லேசாக சாரல் மழை பெய்தது. அதையும் பொருட்படுத்தாமல் திருக்கழுக்குன்றம் பேருந்து நிலையம் வரை பொதுமக்களிடம் முதல்வர் மனுக்களை பெற்றார்.

இந்த ரோடு ஷோவை முடித்துவிட்டு செங்கல்பட்டு மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடந்த விழாவில் பங்கேற்க முதல்வர் மு.க.ஸ்டாலின்காரில்புறப்பட்டார். அவருக்கு மாவட்ட திமுக சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்னர், ரூ.1,285 கோடியில் புதிய திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்தார். பின்னர் நகர்ப்புற பகுதிகளில் பட்டா வழங்கும் திட்டத்தை முதல்வர் தொடங்கி வைத்தார். விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரையாற்றினார். பின்னர், 20 ஆயிரம் பேருக்கு பட்டா, மகளிர் சுய உதவி குழுவினருக்கு தொழில் கடன் உதவி, பயிர் கடன் மற்றும் விவசாயிகளுக்கு ஆடு, மாடு மற்றும் டிராக்டர் என மொத்தம் 50 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகளை முதல்வர் வழங்கினார்.

விழாவில் அமைச்சர் தா.மோ. அன்பரசன், செல்வம் எம்பி, மாவட்ட கலெக்டர்அருண்ராஜ், எம்எல்ஏக்கள் வரலட்சுமி மதுசூதனன், எஸ்.ஆர்.ராஜா, இ.கருணாநிதி, தாம்பரம் மேயர் வசந்தகுமாரி மற்றும் செங்கல்பட்டு மாவட்ட ஒன்றிய குழு தலைவர்கள், நகராட்சி தலைவர்கள், பேரூராட்சி தலைவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம் சின்ன மாங்குளம் ஊராட்சியில் திட்டப்பணிகள்: அமைச்சர் தொடங்கி வைத்தார்

மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு பி மூர்த்தி அவர்கள் மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம் சின்ன மாங்குளம்ஊராட்சியில்திட்டப்பணிகளை தொடங்கி வைத்த போது அங்கு வசிக்கும் பொதுமக்கள் அந்த பகுதியில் உள்ள இந்திரா நகரில் உள்ள பகுதி நேர நியாய விலைக் கடை கட்டி முடிக்கப்பட்டு திறக்காமல் உள்ளதாகவும் அதனை செயல்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என கோரிக்கை வைத்தனர். உடனடியாக புதிய நியாய விலைக் கடை கட்டிடத்தை ஆய்வு செய்த மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கூட்டுறவு இணைப்பதிவாளரிடம் இந்திரா நகரில் புதிய நியாய விலை கடையை பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தினார். வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலின் பேரில் அந்த பகுதியில் அருகில் உள்ள 4 கிராம மக்கள் பயன்பெறுக்கின்ற வகையில் வாரம் இரு முறை பொருட்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. புதிய நியாயவிலை கடை கட்டிடத்தை மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி மூர்த்தி திறந்து வைத்து வைத்தார்.



# சென்னையில் கால் பதித்தது ...தென் மாவட்டங்களில் கொடி கட்டி பறக்கும் மூவேந்தர் புலிப்படை



சென்னை, மார்ச்.12

தென் மாவட்டங்களில் சமத்துவம்,சமூக நீதிக்காக தொடர்ந்து களமாடி வரும் மூவேந்தர் புலிப்டை அமைப்பு சென்னை மாவட்டத்தில் கால் பதித்து தனது பயணத்தை தொடங்கியுள்ளது தென் மாவட்டங்களில் ஜாதிய கொடுமைகளுக்கு எதிராகவும் பாதிக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களை ஒருங்கிணைத்து மூவேந்தர் புலிப்படை அமைப்பு ஜனநாயக முறையிலான போராட்டங்களை முன்னெடுத்து வருகிறது குறிப்பாக நெல்லை, தூத்துக்குடி ராமநாதபுரம், மதுரை கன்னியாகுமரி, விருதுநகர் உள்ளிட்ட தென் மாவட்டங்களில் கோலோச்சி வரும் இந்த அமைப்பு மதுரையிலும் ராமநாதபுரத்திலும் வீரியமாக செயல்பட்டு வருகிறது முழுக்க முழுக்க சமத்துவத்தை நிலைநாட்ட போராடிவரும் இந்த அமைப்பு படிப்படியாக தமிழகம் முழுவதும் தனது கட்டமைப்பை நிறுவி வருகிறது இதன் தொடர்ச்சியாக சென்னை மாவட்டத்தில் முதன்முறையாக மூவேந்தர் புலிப்படை காலடி எடுத்து வைத்துள்ளது.இதனை நிரூபிக்கும் விதமாக சென்னையில் மூவேந்தர் புலிப்படை அமைப்பின் சென்னை மாவட்ட நிர்வாகிகள் அறிமுக கூட்டம் மற்றும் நோன்பு திறப்பு நிகழ்ச்சி வெகு சிறப்பாக நடைபெற்றது இந்த நிகழ்ச்சிக்கு சென்னை மாவட்ட தலைவர் முகமது அயாஸ் தலைமை தாங்கினார். பொதுச்செயலாளர் நசுருல்லா, பொருளாளர் ரகுமான் ஷரீப் ஒருங்கிணைப்பாளர் அப்துல் தஸ்தகீர் ஆகியோர் முன்னிலை வகித்தனர் இந்த நிகழ்வில் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்ற மூவேந்தர் புலிப்படை நிறுவன தலைவர் செ. பாஸ்கர் வழக்கறிஞர் சிறப்புரையாற்றினார். மாநில பொதுச்செயலாளர் ஐங்கரன் மாநில ஒருங்கிணைப்பாளர் ஜாகிர் உசேன், சென்னை இசிஆர் தொகுதி தலைவர் சையத் ஏஜாஸ் வில்லிவாக்கம் தொகுதி தலைவர் ரஹ்மான் கான் ராயபுரம் தொகுதி தலைவர் அப்துல் அமீர் திருவொற்றியூர் தொகுதி தலைவர் சபீர் அகமது பூவிருந்தவல்லி தொகுதி தலைவர் அம்ஜத் கான் திருவல்லிக்கேணி தொகுதி தலைவர் சையத் எஹியா ஆகியோர் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டனர். கூட்டத்தின் தொடக்கத்தில் உரையாற்றிய மாநில ஒருங்கிணைப்பாளர் ஜாகிர் உசேன் தங்களது அமைப்பின் நோக்கம் குறித்து மிகத் தெளிவாக உரையாற்றினார் தமிழகத்தில் பாசிச சக்திகள் அதிவேகமெடுத்து வருவதால் அவற்றுக்கு எதிராக களமாட புறப்பட்டுள்ளோம் என்று கூறினார். இஸ்லாமியர்களும் தேவேந்திர குல வேளாளர்களும் இணைந்து மதவாத சக்திகளை ஒடுக்க தொடர்ந்து போராடுவோம் என்றும் கூறினார் தமிழகத்தில் மதவாதத்தை ஒருபோதும் விதைக்க முடியாது என்று கூறிய அவர், பாஜக போன்ற பாசிச சக்திகள் மத வாதத்தை திணிக்க முயன்றால் அதனை முன் நின்று எதிர்ப்போம் என்று எச்சரிக்கை விடுத்தார். இதைஅடுத்து உரையாற்றிய மூவேந்தர் படையின் நிறுவனத் தலைவர் பாஸ்கர், தமிழகத்தில் இஸ்லாமிய சமூகம் ஒடுக்கப்பட்டு வருவதாகவும் அதேபோன்று ஜாதி ரீதியாக தேவேந்திர குல வேளாளர் சமூகம் அரசியல் அதிகாரத்தில் புறக்கணிக்கபடுவதாக வேதனை தெரிவித்தார். இது போன்ற காலகட்டங்களில் பாதிக்கப்பட்ட மக்கள் ஒருங்கிணைந்து செயல்பட்டால் தான் பாசிச சக்திகளை எதிர்கொள்ள முடியும் என்று கூறினார். தமிழகத்தில் அமைதியை நிலைநாட்ட தமது அமைப்பு போராடும் என்றும் மதவாதத்தை திணிக்க முயன்றால் அதனை தடுத்து நிறுத்த தொடர்ந்து போராடுவோம் என்று எச்சரித்தார் .தென் மாவட்டங்களில் சிறப்பாக செயல்பட்டு வரும் மூவேந்தர்புலிப்படை அமைப்பு தற்போது சென்னையில் தனது பணியை வீரியத்துடன் தொடங்கி இருப்பதாக தெரிவித்த அவர், சென்னை மாவட்டத்தில் புதிதாக பொறுப்பேற்றுள்ள அனைவருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார் .தொடர்ந்து பேசிய அவர்,

தமிழகத்தில் உள்ள கட்சிகள் பல இருந்தாலும் தங்களது அமைப்பு சமத்துவம் சமூக நீதிக்காக களமாடுவதை தலையாய கடமையாக கொண்டு செயல்படும் என உறுதி அளித்தார் இந்த கூட்டத்தில் திரளான இளைஞர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர் முன்னதாக நடைபெற்ற இப்தார் எனப்படும் நோன்பு திறப்பு நிகழ்ச்சியில் கட்சியின் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# மீனவர் விவகாரம்: வெளியுறவு மந்திரிக்கு கனிமொழி எம்.பி. கடிதம்

புதுடெல்லி, மார்ச்.12

தி.மு.க. எம்.பி. கனிமொழி, வெளியுறவு மந்திரி ஜெய்சங்கருக்கு நேற்று எழுதிய ஒரு கடிதத்தில் கூறியிருப்பதாவது:

இலங்கை கடற்படையினர் அடிக்கடி நமது மீனவர்களை கைது செய்து அவர்களின் படகுகளை பறிமுதல் செய்து வருவது உங்களுக்கு தெரியும். சமீபத்தில் கடந்த 6ந் தேதி, தமிழகத்தைச் சேர்ந்த 14 மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்தது. 2 மாதங்களில் இது 9வது சம்பவம். இன்றைய நிலவரப்படி, தமிழ்நாட்டைச் சேர்ந்த 107 மீனவர்களும், 227 மீன்பிடி படகுகளும் இலங்கை அதிகாரிகளின் காவலில் உள்ளன. எனவே, இந்த பிரச்சினைகள் குறித்து மீனவர் சங்க பிரதிநிதிகளுடன் வந்து உங்களிடம் விரிவாக பேச ஒரு சந்திப்பை எதிர்பார்க்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# மராட்டியம்: சூட்கேசுக்குள் அழுகிய நிலையில் பெண்ணின் உடல் கண்டெடுப்பு

மும்பை, மார்ச். 12

மராட்டிய மாநிலம் ராவின் மாவட்டத்தில் உள்ள துர்ஷெட் கிராமத்தில் வசிப்பவர்கள் சாலையோரத்தில் கிடந்த ஒரு சூட்கேசிலிருந்து துர்நாற்றம் வீசுவதைக் கவனித்தனர். பின்னர் சூட்கேஸ் ஒன்று சந்தேகத்திற்கிடமாக கிடப்பதாக போலீசாருக்கு தகவல் கொடுத்தனர். இதன் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு சென்ற போலீசார் சூட்கேசை திறந்தனர்.

அதில் இருந்த உடலை கண்ட அங்கிருந்த அதிகாரில் அதிர்ச்சியடைந்தனர். அந்த சூட்கேசில் அழுகிய நிலையில், ஒரு பெண்ணின் உடல் அடைக்கப்பட்டிருந்தது. இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பான சூழல் நிலவியது.பின்னர்இந்தஉடலைபோலீசார்அருகில்உள்ளமருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர்.

இறந்த பெண் 25 முதல் 35 வயதுக்குட்பட்டவராக இருக்கலாம் எனவும் இன்னும் உடல் அடையாளம் காணப்படவில்லை எனவும் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.சூட்கேசுக்குள்பெண்ணின்உடல்கண்டெடுக்கப்பட்டசம்பவம் அப்பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இது குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கேரளாவில் போலி ஆதார் அட்டை தயாரிக்கும் மையம் கண்டுபிடிப்பு ஒருவர் கைது

கொச்சி, மார்ச்.12

கேரள போலீசாருக்கு பெரும்பாவூரில் உள்ள ஒரு கடையில் போலியான ஆதார் அட்டை தயாரிக்கும் மையம் குறித்து ரகசிய தகவல் கிடைத்தது. இதன் அடிப்படையில் அப்பகுதியில் போலீசார் ஆய்வு செய்தனர். அப்போது பெரும்பாவூரின்தனியார்பேருந்துநிலையம்அருகேஒருஷாப்பிங்வளாகத்தின் தரை தளத்தில் உள்ள மொபைல் போன் கடைக்குள் இந்த பிரிவு செயல் பட்டு வந்தது தெரியவந்த்து.

இந்த மொபைல் கடையை முற்றுகையிட்ட போலீசார் சோதனையின் போது பல போலி ஆதார் அட்டைகள், மடிக்கணினிகள், பிரிண்டர்கள், மொபைல்போன்கள்மற்றும்சுமார்50 ஆயிரம் ரூபாய் பணத்தையும் பறிமுதல் செய்தனர். அந்த போலி நிறுவனத்தை நடத்தி வந்த அசாமை சேர்ந்த ஹரிஜுல் இஸ்லாம்என்பவரைபோலீசார்கைதுசெய்துவிசாரணைநடத்திவருகின்றனர்.

# துப்பாக்கியுடன் நகைக்கடைக்குள் புகுந்து அதிரடி கொள்ளை.... 2 பேர் கைது



பாட்னா, மார்ச்.12

பீகார் மாநிலம் போஜ்பூர் மாவட்டத்தில் உள்ள கோபாலி சவுக் பகுதியில் ஒரு பிரபல நகைக்கடை ஒன்று அமைந்திருந்தது. இந்த நகைக்கடைக்குள் இன்று காலை 11 மணியளவில் கையில் துப்பாக்கியுடன் அதிரடியாக புகுந்த கொள்ளையர்கள் அங்கிருந்த அனைவரையும் தாக்கினர்.

பின்னர் அந்த கடையின் ஷட்டரை பூட்டி அனைவரையும் துப்பாக்கி முனையில் பிணைக் கைதிகளாக பிடித்து வைத்தனர். அந்த நகை கடையில் உள்ள சுமார் ரூ. 26 கோடி மதிப்புள்ள பொருட்களை கொள்ளையர்கள் அதிரடியாக கொள்ளையடித்து சென்றனர்.

இது குறித்து போலீசில் நகைக்கடை ஊளியர்கள் புகார் அளித்தனர். இதனையடுத்து போலீசார் அப்பகுதியில் தீவிர சோதனை நடத்தினர். நகரம் முழுவதும் பாதுகாப்பை போலீசார் அதிகரித்தனர். அப்போது பர்ஹாரா அருகே சந்தேகத்திற்கிடமான சூழ்நிலையில் பைக்கில் இருவர் செல்வதை கண்டுபிடித்தனர்.

அவர்கள் போலீசாரை கண்டதும் தப்பி ஓட முயன்றனர். பின்னர் அந்த இளைஞர்கள் கையில் இருந்த துப்பாக்கியால் சுட தொடங்கினர். இதனால் போலீசாருக்கும் கொள்ளையர்களுக்கும் துப்பாக்கி சண்டை ஏற்பட்டது.

இந்த சண்டையில் இளைஞர்கள் இருவரின் காலிலும் குண்டடிப்பட்டது. பின்னர் இருவரும் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து கொள்ளையடிக்கப்பட்ட நகைகளில் சுமார் 70 சதவீதம் போலீசார் கையகப்படுத்தினர்.

இது குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார் இருவரிடமும் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் இந்த திருட்டில் ஈடுபட்ட மற்ற 4 பேரையும் போலீசார் தீவிரமாக தேடி வருகின்றனர்.

# புனேயில் இருந்து குமரிக்கு கடத்தி வந்த 12 கிலோ கஞ்சா பறிமுதல்

கன்னியாகுமரி, மார்ச்.12

குமரி மாவட்டத்தில் கஞ்சா விற்பனையை தடுக்க போலீசார் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

இந்த நிலையில் புனேயில் இருந்து புறப்பட்ட ரெயில் நேற்று காலை 11.40 மணிக்கு கன்னியாகுமரி வந்தது. பயணிகள் அனைவரும் இறங்கியதும் ரெயிலில் ஒவ்வொரு பெட்டிகளாக ரெயில்வே போலீசார் சோதனை நடத்தினர். அப்போது முன்பதிவு அல்லாத பெட்டி ஒன்றில் இருக்கைக்கு கீழே ஒரு டிராலி பேக் கிடந்தது. இதைப் பார்த்தபோலீசார்உடனே பேக்கை திறந்து பார்த்தனர். அப்போது அதில் 12 பொட்டலங்கள் கஞ்சா இருந்தன.



இதைத் தொடர்ந்து அவற்றை போலீசார் பறிமுதல் செய்தனர்.

அந்த வகையில் 12 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது.

இந்த கஞ்சாவை வெளி மாநிலத்தில் இருந்து மர்ம ஆசாமிகள் கடத்தி வந்துள்ளனர். ஆனால் கஞ்சாவானது நேராக குமரி மாவட்டத்துக்கு கடத்தி வரப்பட்டதா? அல்லது ரெயில் வரும் வழியில் வேறு ஏதாவது ஊருக்கு அனுப்பி வைத்ததை எடுக்காமல் விட்டதால் அது நேராக குமரி மாவட்டத்துக்கு வந்ததா? என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து பறிமுதல் செய்யப்பட்ட கஞ்சா பொட்டலங்கள் போதை பொருள் கடத்தல் தடுப்பு பிரிவு போலீசாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதுதொடர்பாகபோலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள். ரெயிலில் கஞ்சாகடத்தல் சம்பவங்கள் தற்போது அடிக்கடி அரங்கேறி வருகின்றன. இதனால் கண்காணிப்பை தீவிரப்படுத்த போலீசார் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

# 160 ஆண்டுகள் பழமைவாய்ந்த சென்னை ஜார்ஜ் டவுன் பதிவு அலுவலகம் ரூ.9.85 கோடியில் புதுப்பிப்பு அமைச்சர்கள் திறந்து வைத்தனர்

சென்னை, மார்ச்.12

சென்னை, ஜார்ஜ் டவுனில், பதிவுத்துறையின் வரலாற்றை சிறப்பிக்கும் விதமாக, புனரமைக்கப்பட்ட புராதானகட்டடத்தில்செயல்பட உள்ள பதிவுத்துறையின் அலுவலகங்களை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு ஆகியோர் குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தனர்



பதிவுத்துறைக்கு சொந்தமான 160 ஆண்டுகள் பழமை வாய்ந்த புராதான கட்டடம் சென்னை ஜார்ஜ் டவுன் ராஜாஜி சாலையில் அமைந்துள்ளது. இந்த கட்டடம் 1864ம் ஆண்டு இந்தோ சாரசனிக் கட்டடக்கலை நயத்துடன் கட்டப்பட்ட வரலாற்று சிறப்பு மிக்கது.

இப்புராதான கட்டடம் மெட்ராஸ் நாட்டு தளக் கூரை (Madras Terrace Roof) பின்பகுதி மங்களூர் ஓட்டு கூரை (Mangalore Tiled Roof) மற்றும் தேக்கு மர உத்திரங்களால் ஆன 24,908 சதுரடி பரப்பளவில் அமையப்பெற்றுள்ளது.

பலஆண்டுகள்கழித்து, வலுவிழந்த நிலையில் காணப்பட்ட இப்புராதான கட்டடத்தை பழமை மாறாமல் மேம்படுத்தபட்ட வசதிகளுடன் புனரமைப்பு செய்ய அரசு முன்னுரிமை வழங்கி ரூ.9.85 கோடி செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு இன்று பொது மக்கள் பயன்பாட்டிற்கு அமைச்சர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

# குமரி: ஓடும் பஸ்சில் மூதாட்டியிடம் பணம் திருட்டு

கன்னியாகுமரி, மார்ச்.12

கன்னியாகுமரி மாவட்டம் களியக்காவிளை அருகே உள்ள வன்னியூர் கிருஷ்ண விலாசத்தைச் சேர்ந்தவர் கிருஷ்ணன் பிள்ளை.

இவருடைய மனைவி சுகன்யா குமாரி (வயது 75). இவர் சம்பவத்தன்று குழித்துறையில் உள்ள ஒரு வங்கியில் இருந்து ரூ.84 ஆயிரத்தை எடுத்து தனது பையில் வைத்தார்.

பின்னர், வீட்டிற்கு செல்வதற்காக குழித்துறையில் இருந்து களியக்காவிளை செல்லும் அரசு மகளிர் இலவச பஸ்சில் ஏறி உள்ளார். களியக்காவிளையில் இறங்க முயன்றார்.

அப்போது பை பிளேடால் கிழிக்கப்பட்டு அதில் இருந்த ரூ.84 ஆயிரம் மற்றும் வங்கி காசோலை புத்தகம் ஆகியவை மாயமாகி இருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தார். யாரோ மர்ம நபர் சுகன்யா குமாரி பணத்தை எடுத்து வருவதை நோட்டமிட்டு திருடிச் சென்றது தெரிய வந்தது.

இதுகுறித்து சுகன்யா குமாரி களியக்காவிளை போலீசில் புகார் செய்தார். அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து மர்ம நபரை தேடி வருகிறார்கள்.

# கரூர்: கல்லூரி மாணவி கடத்தப்பட்ட சம்பவம் 3 தனிப்படைகள் அமைப்பு

கரூர் மார்ச். 12

கரூரில் அரசு கலைக் கல்லூரியில் படிக்கும் மாணவி பட்டப்பகலில் கடத்தப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. பேருந்தில் இருந்து இறங்கி சகமாணவிகளுடன் கல்லூரிக்கு நடந்து சென்றபோது மர்ம நபர்கள் ஆம்னி வேனில் வந்து மாணவியை கடத்தியுள்ளனர். இதுகுறித்து சக மாணவிகள் மற்றும் அங்கிருந்த பொதுமக்கள் அளித்த தகவலின்பேரில் சம்பவ இடத்திற்கு சென்ற போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.







மாணவியை ஒருதலையாக காதலித்த பக்கத்து ஊரைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் நண்பர்களுடன் வந்து கடத்தியதாக தகவல் வெளியானது. மாணவியை கடத்திய ஆம்னி வேன் கரூர் திண்டுக்கல் மாவட்ட எல்லையான வெள்ளோடு பகுதியை கடந்து சென்றது விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இந்த நிலையில், கல்லூரி மாணவி ஆம்னி வேனில் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக எஸ்.பி. உத்தரவின்பேரில் மூன்று தனிப்படைகள் அமைத்து போலீசார் தேடுதல் வேட்டை நடத்தி வருகின்றனர்.

# தர்மபுரி: ஆசிரியை வீட்டின் பூட்டை உடைத்து 100 பவுன் நகைகள் திருட்டு

தர்மபுரி மார்ச்.12

தர்மபுரி மாவட்டம், நல்லம்பள்ளி அருகே புறவடை தேசிய நெடுஞ்சாலை சந்திப்பு பகுதியில் சேலம்தர்மபுரி தேசிய நெடுஞ்சாலையை ஒட்டிய வீட்டில் வசித்து வருபவர் ஷேர்லின்பெல்மா. இவர் அரசு உதவி பெறும் பள்ளியில் ஆசிரியையாக பணிபுரிந்து வருகிறார். இவருக்கு திருமணம் ஆகவில்லை. ஓய்வுபெற்ற ஆசிரியையும், தனது தாயாருமான மேரியுடன் ஷேர்லின் பெல்மா வசித்து வந்துள்ளார்.

மேரி மருத்துவ சிகிச்சைக்காக, வேலூருக்கு சென்றதாக கூறப்படுகிறது. இந்த நிலையில் ஷேர்லின் பெல்மா வீட்டை பூட்டிவிட்டு நேற்று முன்தினம் பள்ளிக்கு சென்றுள்ளார். பள்ளி முடிந்தபின் மீண்டும் வீட்டுக்கு அவர் திரும்பி வந்தார். அங்கு கதவின் பூட்டு உடைக்கப்பட்டிருந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தார்.

உடனே அவர் வீட்டுக்குள் சென்று பார்த்தபோது பிரோவில் வைத்திருந்த அவரது 70 பவுன் தங்க நகையையும், மேரியின் 30 பவுன் தங்க நகை மற்றும் ரூ.1½ லட்சத்தையும் மர்ம கும்பல் திருடிச்சென்றது தெரிய வந்தது.

இது குறித்து ஷேர்லின் பெல்மா போலீசில் புகார் அளித்துள்ளார். புகார் தொடர்பாக அதியமான்கோட்டை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பால் உற்பத்தியாளர்களுக்கான இழப்பீடு உயர்வு

சென்னை, மார்ச்.12

பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படும் இழப்பீடு, இதர நிதி உதவிகளை உயர்த்தி தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

பேரறிஞர் அண்ணா கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் நல நிதியத்தின் கீழ் பால் உற்பத்தியாளர்களுக்கு இழப்பீடு மற்றும் இதர நிதி உதவிகள் வழங்கப்படுகிறது. இந்த நிதி உதவிகள் உயர்த்தி வழங்கப்படும் என்று சட்டப்பேரவையில் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். இதனை செயல்படுத்தும் விதமாக விதிகளை திருத்தம் செய்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.



இதன்படி, பால் உற்பத்தியாளர்கள் விபத்தில் மரணம் அடைந்தால் வழங்கப்படும் இழப்பீடு ரூ.2.50 லட்சத்தில் இருந்து ரூ.4 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இரண்டு குழந்தைகளுக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகை 25 ஆயிரத்தில் இருந்து 50 ஆயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது. ஒரு பெண் குழந்தைக்கு வழங்கப்படும் திருமண உதவித்தொகை 30 ஆயிரத்திலிருந்து 60 ஆயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது. ஈமச்சடங்கு உதவித் தொகை 5 ஆயிரத்தில் இருந்து 25 ஆயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது. விபத்தில் ஊனமுற்ற பால் உற்பத்தியாளர் ஓர் உறுப்பை இழந்தால் வழங்கப்படும் உதவித் தொகை 75 ஆயிரத்தில் இருந்து 1 லட்சமாகவும், இரண்டு உறுப்பை இழந்தால் 1.75 லட்சத்தில் இருந்து 2.25 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

இதை செயல்படுத்த பால் ஊற்றும் உறுப்பினர்களிடம் இருந்த மாதத்திற்கு பெறப்படும் சந்தா ஒரு ரூபாய் இருந்து 10 ரூபாய் ஆக உயர்த்தப்பட்டுள்ளது. சங்கம் மற்றும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்திடம் இருந்து மாதத்திற்கு பெறப்படும் சந்தா 50 பைசாவில் இருந்து ஒரு ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

# தனியார் பள்ளிகளில் 3 மொழி கற்பிக்கப்படவில்லை என கூற முடியுமா? தமிழிசை சவுந்தரராஜன் கேள்வி

சென்னை, மார்ச்.12

தமிழக பா.ஜனதா முன்னாள் தலைவர் டாக்டர் தமிழிசை சவுந்தரராஜன், 'எக்ஸ்' சமூகவலைதள பதிவில் கூறியிருப்பதாவது:

தமிழக முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின், தி.மு.க. எம்.பி.க்கள் 7 மாநில தலைவர்களை சென்று சந்திப்பார்கள் என்று சொல்லியிருக்கிறார். முதலில் உங்கள் எம்.பி.க்களை அவரவர் தொகுதிக்கு ஒழுங்காக செல்ல சொல்லுங்கள். உள்துறை மந்திரி அமித்ஷா, தொகுதி வரையறையால் தமிழகம் எந்த விதத்திலும் பாதிக்கப்படாது என்று சொன்ன பிறகும், தினந்தோறும் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கும் பல பிரச்சினைகளை மறைப்பதற்கு இந்த பிரச்சினையை கையில் எடுத்திருப்பதை மக்கள் நன்கு அறிந்திருக்கிறார்கள். உங்கள் இரட்டை வேடம் எடுபடாது.



தமிழகத்தில் தனியார் பள்ளி குழந்தைகளுக்கு ஒரு கொள்கை, அரசு பள்ளி குழந்தைகளுக்கு ஒரு கொள்கை என்று வைத்திருக்கிறீர்கள். இதை முதல் அமைச்சரால் மறுக்க முடியுமா? தனியார் பள்ளி பிள்ளைகளுக்கு கிடைக்கும் வாய்ப்பு, அரசு பள்ளி பிள்ளைகளுக்கு கிடைப்பதில்லை என்ற உண்மையை உங்களால் மறுக்க முடியுமா? அப்படி என்றால் எத்தனை அமைச்சர்களின் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், அரசு பள்ளியில் படிக்கிறார்கள்? தமிழகத்தில் தனியார் பள்ளிகளில் 3 மொழி கற்பிக்கப்படவில்லை என கூற முடியுமா?. அரசு பள்ளி குழந்தைகளை வஞ்சித்து, உங்கள் அரசியலை முன்னெடுத்துச் செல்கிறீர்கள். இதை மக்கள் உணரும் காலம் வெகு தொலைவில் இல்லை. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சிறுவனுக்கு பாலியல் தொந்தரவு: யூடியூபர் திவ்யா உள்ளிட்டோர் குண்டர் சட்டத்தில் கைது

விருதுநகர், மார்ச்.12

சிறுவர்களிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்டதாக கைது செய்யப்பட்டுள்ள யூடியூபர் திவ்யா, கார்த்திக், சித்ரா ஆகியோர் மீது குண்டர் சட்டத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடலூாரைச் சேர்ந்தவர் சித்ரா(54). மக்கள் பார்வை என்ற யுடியூப் சேனலை நடத்தி வருகிறார். அவர், திவ்யா கள்ளச்சி என்ற யூடியூப் சேனல் நடத்தி வரும் தஞ்சாவூரைச் சேர்ந்த திவ்யா (30), ஈரோட்டை சேர்ந்த கீழக்கரை சேர்ந்த கார்த்திக் (30) என்பவரும் சேர்ந்து விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூாரில் சிறுவர்களை வைத்து ஆபாச ரீல்ஸ் எடுத்துள்ளதாக, சென்னை டி.ஜி.பி. அலுவலகத்தில் சித்ரா புகார் அளித்திருந்தார். அதில் தன்னுடைய வங்கி கணக்கை ஹேக் செய்து ரூ.2.5 லட்சத்தை திவ்யா எடுத்துள்ளதாகவும் குறிப்பிட்டிருந்தார்.



இதனையடுத்து பாதிக்கப்பட்ட2சிறுவர்களிடம் விருதுநகர் மாவட்ட குழந்தைகள் நல அலுவலர் மீனாட்சி விசாரணை நடத்தினார்.

அதில் யூடியூபர்கள் திவ்யா, கீழக்கரை கார்த்திக் ஆகியோர்சில மாதங்களுக்குமுன்சிறுவர்களை பயன்படுத்தி ஆபாச ரீல்ஸ் எடுத்தது தெரிய வந்தது. இதுகுறித்து குழந்தைகள் நல அலுவலரின் புகாரில் திவ்யா, கீழக்கரை கார்த்திக் ஆகியோரிடம் விசாரணை நடத்தப்பட்டது. விசாரணையில் சித்ரா சொல்லி தான் வீடியோ எடுத்ததாக கார்த்திக் தெரிவித்தார்.

இதனைத்தொடர்ந்து இவர்கள் மீது போக்சோ உள்பட 4 பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்யப்பட்டது. அவர்களின் செல்போன்களும் பறிமுதல் செய்யப்பட்டது.

தொடர்ந்து விசாரணை நடத்து வந்த நிலையில், தற்போது யூடியூபர் திவ்யா, கார்த்திக், சித்ரா ஆகியோர் மீது குண்டர் சட்டத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. ஏற்கெனவே சிறையில் உள்ள 3 பேரை குண்டர்சட்டத்தில்கைது செய்ய விருதுநகர் எஸ்.பி. கண்ணன் பரிந்துரைத்திருந்த நிலையில், விருதுநகர் கலெக்டர் ஜெயசீலன்இதற்கானஉத்தரவை பிறப்பித்துள்ளார்.

# பள்ளி மாணவன் மீது சாதிய கொலைவெறி தாக்குதல் திருமாவளவன் கண்டனம்

சென்னை, மார்ச்.12

விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன்தனதுஎக்ஸ்வலைதளத்தில்கூறியிருப்பதாவது:

தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டம் அருகே அரியநாயகபுரம் கிராமத்தைச் சார்ந்த 11ஆம் வகுப்பு பள்ளி மாணவன் தேவேந்திர ராஜ் மீது சாதிவெறியர்கள் நடத்தி உள்ள சாதிய கொலைவெறித் தாக்குதலை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் வன்மையாக கண்டிக்கிறோம்.

சில நாட்களுக்கு முன்னர் கட்டாரிமங்கலத்தில் அரியநாயகபுரம் அணிக்கும் கெட்டியம்மாள்புரம் அணிக்கும் நடைபெற்ற கபடி போட்டியில் அரியநாயகபுரம் அணி வெற்றி பெற்றுள்ளது. இந்த வெற்றியை அரியநாயகபுரம் அணியில் இடம் பெற்றிருந்த தேவேந்திர ராஜ் உள்ளிட்ட அனைவரும் கோப்பையுடன் கொண்டாடி உள்ளனர். இதனைப் பொறுத்துக் கொள்ள இயலாத காழ்ப்புணர்ச்சியால் தான் இத்தாக்குதலை நடத்தி உள்ளனர் என தேவேந்திர ராஜின் பெற்றோர்கள் கூறுகின்றனர்.

கெட்டியம்மாள்புரத்தைச்சார்ந்த மூன்று பேர் இன்று பள்ளிக்கு தேர்வு எழுத பஸ்சில் சென்ற மாணவன் தேவேந்திர ராஜை பஸ்சில் இருந்து கீழே இறக்கி கொலைவெறி தாக்குதல் நடத்தி உள்ளனர்.

இத்தாக்குதலில் மாணவன் தேவேந்திர ராஜின் இரு கைகளிலும் விரல்கள் வெட்டப்பட்டுள்ளன. நான்கு விரல்கள் துண்டாகி உள்ளன. அவற்றில் ஒரு விரல் கிடைக்கவில்லை. மற்ற மூன்று விரல்களையும் ஒட்டும் அறுவை சிகிச்சை தற்போது நடைபெற்று வருகிறது. தலையில் ஆறு இடங்களில் வெட்டி உள்ளனர். மண்டைஓடு வரை படுகாயம் பட்டுள்ளது. முதுகிலும் பல இடங்களில் வெட்டுக் காயம் உள்ளது.

உயிருக்கு ஆபத்தான நிலையில் திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் பள்ளி மாணவன் தேவேந்திர ராஜுவுக்கு சிறப்பான மருத்துவ சிகிச்சை வழங்கிட வேண்டும்!

தென்மாவட்டங்களில் குறிப்பாக நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில்சாதிவெறித்தாக்குதல்களும் படுகொலைகளும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. தமிழக அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்து இத்தகைய சாதிவெறியாட்டங்களை கட்டுப்படுத்த வேண்டும்.

சாதிய வன்கொடுமைகளை தடுத்திடும் வகையில் தமிழக அரசு இதற்கெனகாவல்துறையில்தனியே ஒரு நுண்ணறிவுப் பிரிவை உருவாக்கிட வேண்டும் என மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறோம்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருத்தணி மார்க்கெட்டுக்கு காமராஜர் பெயர் தமிழக அரசு அறிவிப்பு

சென்னை, மார்ச்.12

காமராஜர் பெயரில் இயங்கி வந்த திருத்தணி காய்கறி சந்தைக்கு கருணாநிதி பெயர் வைக்கப்பட இருப்பதாக தகவல்கள் வெளியானது. அதற்கு எதிர்ப்பு கிளம்பிய நிலையில், மீண்டும் அந்தச் சந்தை காமராஜர் பெயரிலேயே இயங்கும் என்று முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளதார். இந்தநிலையில், திருவள்ளூர் நகராட்சி நிர்வாக இயக்குநர் வெளியிட்டுள்ள அறிக்கையில், திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகராட்சி ம.பொ.சி சாலையில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் நாளங்காடி 81 கடைகளுடன் 35 ஆண்டுகளாக செயல்பட்டு வந்தது. பழைய மார்க்கெட் தற்போதைய மக்கள் தொகைக்கு போதுமானதாக இல்லாததாலும், சிதிலமடைந்து மோசமான நிலையில் இருந்ததாலும், பழைய கட்டிடத்தினை இடித்து, அப்புறப்படுத்தி 97 கடைகளுடன் புதியதாக நாளங்காடி கட்டுவதற்கு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தில் ரூ.3.02 கோடி மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை எண்.(4D) 35. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 18.08.2023 வெளியிடப்பட்டது.அதன்படி,கட்டப்படும்நாளங்காடியின்அனைத்து பணிகளும் முடிவடையும் தருவாயில் உள்ளன. புதியதாக கட்டப்பட்டுள்ள நாளங்காடிக்கு "பெருந்தலைவர் காமராஜர் நாளங்காடி" என்று பெயரிட தமிழ்நாடு அரசு முடிவெடுத்துள்ளது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு அரசுப்பணி: கண்டிப்பாக தமிழ் மொழி பேசவும், எழுதவும் தெரிந்திருக்க வேண்டும் மதுரை கோர்ட்டு

மதுரை, மார்ச்.12

தேனியைச் சேர்ந்த ஜெயக்குமார் என்பவர் 2022ம் ஆண்டு தாக்கல் செய்த மனுவில், மின்சார உற்பத்தி கழகத்தில் இளநிலை உதவியாளராக தான் வேலை பார்த்து வந்ததாகவும், தமிழ் மொழி தெரியாத காரணத்தால் தன்னை பணியில் இருந்து நிறுத்திவைத்ததாகவும் குறிப்பிட்டிருந்தார். மேலும்தன்னைமீண்டும் பணியில் சேர்க்க உத்தரவிட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்திருந்தார். இந்த மனுவை விசாரித்த தனி நீதிபதி, மனுதாரரை மீண்டும் பணியில் சேர்க்க உத்தரவிட்டார்.



இதனைத்தொடர்ந்து தனி நீதிபதியின் உத்தரவை ரத்து செய்யக்கோரி தமிழ்நாடு மின் உற்பத்தி கழகத்தின் சார்பில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு நடந்த வழக்கு விசாரணையின்போது, ஜெயக்குமார் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், மனுதாரர் சி.பி.எஸ்.சி. பாடத்திட்டத்தில் படித்ததால், அவரால் தமிழ் மொழியை கற்க இயலவில்லை என்றார்.

அனைத்துத் தரப்பு வாதங்களையும் கேட்டறிந்த நீதிபதிகள், தமிழக அரசுப் பணியில் ஒருவர் பணிபுரிய வேண்டும் என்றால், அவருக்கு கண்டிப்பாக தமிழ் மொழி, பேசவும், எழுதவும் தெரிந்திருக்க வேண்டும் என்று தெரிவித்தனர்.

மேலும் தமிழக அரசுப் பணியாளருக்கு தமிழ் தெரியாது என்றால், அவர் எப்படி அன்றாட பணிகளை மேற்கொள்ள முடியும் என்றும் நீதிபதிகள் கேள்வி எழுப்பினர். இதனையடுத்து குறிப்பிட்ட கால அளவிற்குள், மாநில அரசு சார்பில் நடத்தப்படும் மொழித் தேர்வில் வெற்றிபெற வேண்டும் என்று அறிவுறுத்திய நீதிபதிகள், மாநில அரசின் அலுவலக மொழி தெரியவில்லை எனில், பொதுப் பணிக்கு ஏன் வருகிறீர்கள்..? என்றும் கேள்வி எழுப்பினர்.

இதனைத் தொடர்ந்து வழக்கு விசாரணையை இறுதி வாதங்களுக்காக நீதிபதிகள் ஒத்திவைத்தனர்.

## கூடலூரில் மாணவிகளை பின் தொடர்ந்து அட்டகாசம்: போலீஸ் நடவடிக்கை தேவை

கூடலூர், மார்ச்.12

தேனி மாவட்டம் கூடலூரில் பள்ளி செல்லும் மாணவிகளை பின் தொடரும் ரோமியோக்கள் அட்டகாசத்தை தடுக்க போலீசார் நடவடிக்கை எடுக்க வேண்டும். கூடலூர் பெட்ரோல் பங்க் அருகே என்.எஸ்.கே.பி பொன்னையா கவுண்டர் மேல்நிலைப்பள்ளி உள்ளன. இப்பள்ளிகளுக்கு கே.எம். பட்டி, கே.ஜி.பட்டி, லோயர் கேம்ப் உள்ளிட்ட பகுதியைச் சேர்ந்த மாணவிகள் ஏராளமானோர் கூடலூர் வந்து படிக்கின்றனர். மாணவிகள் பள்ளிக்கு வரவும், வீட்டிற்கு செல்லவும் தினமும் கூடலூர் பஸ்ஸ் டாண்டிற்கு வந்து செல்ல வேண்டும். மாலையில் பஸ்சிற்காக மாணவிகள் பஸ் ஸ்டாண்டில் மற்றும் பெட்ரோல் பங்க்ல் காத்திருக்கின்றனர். இந்த நேரத்தில் ரோமியோக்கள் டூவீலரில் பின் தொடர்வதும், மாணவிகளிடம் ரகளை செய்வதும் தொடர்கிறது. மேலும் பொம்மச்சி அம்மன் கோவில் தெரு, மகராசி அம்மன் கோவில் தெரு, காமாட்சி அம்மன் கோவில் தெரு,ரோடு பகுதியில் கூட்டமாக நின்று மாணவிகளை கிண்டல் செய்வது வாடிக்கையாக உள்ளது. அடிக்கடி நடக்கும் சம்பவத்தால் பெற்றோர்கள் புலம்பி வருகின்றனர். பள்ளிக்கு சென்று, வரும் மாணவிகளின் பாது காப்பை உறுதி செய்திட காலை, மாலையில் போலீசார் ரோந்து பணியில் ஈடுபடவும், மாணவிகளை பின்தொடர்வோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெற்றோர்கள் எதிர்பார்க்கின்றனர்

## பூந்தமல்லி - பரந்தூர் வரை மெட்ரோ ரயில் போக்குவரத்து அமைப்புக்கான விரிவான திட்ட அறிக்கை தமிழ்நாடு அரசிடம் சமர்ப்பிப்பு

சென்னை, மார்ச்.12

பூவிருந்தவல்லி – பரந்தூர் வரை மெட்ரோ ரயிலை நீட்டிக்க தமிழ்நாடு அரசிடம் விரிவான திட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது குறித்து வெளியிடப்பட்டுள்ள திட்டஅறிக்கையில் பூந்தமல்லி முதல் பரந்தூர் வரை மெட்ரோ இரயில் நீட்டிப்பதன் பரிந்துரைக்கான விரிவான திட்டஅறிக்கை (Detailed Project Report) தமிழ்நாடு அரசின்சிறப்பு முயற்சிகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர். கே. கோபால், இ.ஆ.ப., அவர்களிடம், அரசு முதன்மை செயலாளரும், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநருமான மு.அ.சித்திக், இ.ஆ.ப., இன்று(11.03.2025) சென்னை தலைமைச் செயலகத்தில் சமர்ப்பித்தார்.



இந்நிகழ்வில்,சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் திட்ட இயக்குநர் தி. அர்ச்சுனன், நிதிஇயக்குநர் எஸ்.கிருஷ்ணமூர்த்தி, தலைமை பொது மேலாளர் (திட்டம் திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு). டி.லிவிங்ஸ்டோன் எலியாசர், இணைப் பொது மேலாளர் (வணிக மேம்பாடு) ஆர்.நரேந்திரகுமார் மற்றும் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

முன்மொழியப்பட்ட மெட்ரோ ரயில் நீட்டிப்பு பூந்தமல்லியில் இருந்து தொடங்கி, செம்பரம்பாக்கம், தண்டலம், இருங்காட்டுக்கோட்டை, ஸ்ரீபெரும்புதூர், சுங்குவார்சத்திரம் வழியாகச் சென்று பரந்தூர் விமானநிலையத்தில் முடிவடைகிறது, இது குத்தம்பாக்கம் பேருந்து முனையம் மற்றும் முன்மொழியப்பட்ட பசுமை வெளி விமான நிலையத்திற்கு தடையற்ற இணைப்பை வழங்கும். திட்ட செலவு மற்றும் செயல்படுத்தல் நேரத்தை மேம்படுத்துவதற்காக, பூந்தமல்லி மற்றும் ஸ்ரீபெரும்புதூர் இடையேயான 5.892 கி.மீ நீளத்திற்கு இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் (National Highways Authority of India – N H A I) முன்மொழியப்பட்ட உயர்த்தப்பட்ட வழித்தடத்துடன் இது ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

திட்ட விவரங்கள்பின்வருமாறு:

★ வழித்தடத்தின் மொத்த நீளம்: 52.94 கி.மீ

உயர்த்தப்பட்ட நிலையங்களின் எண்ணிக்கை: 20

★ மதிப்பிடப்பட்ட நிறைவுசெலவு:ரூ.15,906 கோடி.

திட்ட அமலாக்கத்தின் ஒருபகுதியாக, பூந்தமல்லி முதல் சுங்குவார்சத்திரம் வரைகட்டம்1 இன்கீழ்செயல்படுத்த ஆலோசகர் பரிந்துரைத்துள்ளார், மேலும் அதன் விவரங்கள் பின்வருமாறு:

★ வழித்தடத்தின் மொத்த நீளம்: 27.90 கி.மீ

★ உயர்த்தப்பட்ட நிலையங்களின் எண்ணிக்கை: 14

★ மதிப்பிடப்பட்ட நிறைவு செலவு: ரூ. 8,779 கோடி. (மேலே உள்ள மதிப்பிடப்பட்ட செலவில் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் உயர்த்தப்பட்டநடைபாதை ஒருங்கிணைப்பு செலவு சேர்க்கப்படவில்லை.) இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

## பள்ளிப்பட்டு அருகே திருமலீஸ்வரர் கோயில் மகா கும்பாபிஷேகம்: ஏராளமான பக்தர்கள் பங்கேற்பு

பள்ளிப்பட்டு, மார்ச்.12

பள்ளிப்பட்டு அருகே, திருமலீஸ்வரர் திருக்கோயில் மகா கும்பாபிஷேக விழா நேற்று வெகு விமரிசையாக நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்து வழிபட்டனர். பள்ளிப்பட்டு அருகே பழைய கொளத்தூர் கொசஸ்தலை ஆற்றின் கரைப் பகுதியில் 1,500 ஆண்டுகளுக்கு முன்பு விஜயநகர பேரரசர் ஸ்ரீ கிருஷ்ண தேவராயர் ஆட்சி காலத்தில் திரிபுரசுந்தரி சமேத திருமலீஸ்வரர் கோயில் கட்டப்பபடதாக இக்கோயிலில் உள்ள கல்வெட்டுகள் கூறுகின்றன. இருப்பினும் காலப்போக்கில் கோயில் சிதிலமடைந்து காணப்பட்டது.



இந்நிலையில் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு திருத்தணியைச் சேர்ந்த சேஷன்யக்னபிரியா தம்பதி கோயிலுக்கு புனரமைப்பு பணிகள் மேற்கொள்ள முன் வந்தனர். கிராமமக்கள் உதவியுடன் சிதிலமடைந்த கோயில் ராஜகோபுரம், விமான கோபுரங்கள், அம்மன் சன்னதிகள், கல் மண்டபம், கோயில் சுற்றி கல் மண்டம், சுற்றுச்சுவர் உள்பிரகாரங்கள் புதுப்பித்து கலைநுட்பத்துடன் சிலைகள் அமைத்து வண்ணம் தீட்டுவதுஉள்ளிட்டகோயில் திருப்பணிகள் அனைத்தும் முடிவுற்றன.

இதனையடுத்து கடந்த வியாக்கிழமை முதல் நேற்று வரை 5 நாட்கள் மகாகும்பாபிஷேகவிழாவையொட்டி கோயில் மற்றும் கிராம வீதிகள் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டது. இதனைதொடர்ந்து, கோயில் வளாகத்தில் யாகசாலைகள் அமைத்து 20 பேர் கொண்ட சிவாச்சாரியார்கள் நித்திய ஹோம குண்ட பூஜைகள் செய்தன்ர். விழாவில், 5ம்நாளானநேற்றுகாலை 4ம் காலை யாக பூஜைகள், மஹா பூர்ணாஹுதி யாகசாலை பூஜைகள் நடைபெற்றது.

தொடர்ந்து ஏராளமான பக்தர்கள் கோயில் முன்பு கூடியிருக்க சிவாச்சாரியார்கள் புனித நீர் கலசங்கள் புறப்பாடு நடைபெற்று காலை 10 மணிக்கு ராஜகோபுரம் மற்றும் விமான கோபுரங்களுக்கு வேத மந்திரங்கள் முழங்க மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. பக்தர்கள் நமச்சிவாய பக்தி பரவசத்துடன் சாமி தரிசனம் செய்தனர். பக்தர்கள் மீது புனிதநீர் தெளிக்கப்பட்டது.

தொடர்நது திருமலீஸ்வரருக்கு சிறப்பு அபிஷேக பூஜைகள் நடைபெற்று மலர் அலங்காரம் செய்து மகா தீபாராதனை நடைபெற்றது. பக்தர்கள் வரிசையில் காத்திருந்து சாமி தரிசனம் செய்து வழிபட்டனர். பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. மாலை திரிபுரசுந்தரி சமேத திருமலீஸ்வரர் திருக்கல்யாணம் நடைபெற்றது. விழாக்குழுவினர் மற்றும் கொளத்தூர் கிராம மக்கள் மஹா கும்பாபிஷேக விழா ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர்.

## ஆடி கார் மோதி இளைஞர் பலி: தலைமறைவான ஐ.டி. ஊழியரை 48 மணி நேரத்தில் பிடித்த போலீஸ்

விழுப்புரம், மார்ச்.12

திண்டிவனம் அருகே ஆடி கார்மோதி இளைஞர் பலியான சம்பவத்தில் சென்னையைச் சேர்ந்த ஐ.டி. ஊழியர் அரவிந்த் ரவிச்சந்திரன் கைது செய்யப்பட்டுள்ளார்.சென்னை ஆழ்வார் திருநகரைச் சேர்ந்த ஐ.டி. ஊழியரான அரவிந்த் ரவிச்சந்திரன் ஆடி காரில் விழுப்புரம் சென்றபோதுதிண்டிவனம் அருகே விபத்துக்குள்ளானது. கடந்த 9ம் தேதி ஓங்கூர் பாலம் அருகே முன்னால் சென்ற ஸ்கூட்டர் மீது அரவிந்த் ஓட்டிச் சென்ற கார் மோதியதில் நாராயணன் என்பவர் உயிரிழந்தார்.







விபத்தை ஏற்படுத்திவிட்டு தப்பிய அரவிந்த் விழுப்புரம் செல்லாமல் மீண்டும் சென்னைக்கே திரும்பியுள்ளார். விபத்து நடந்த பகுதியில் உள்ள சிசிடிவி காட்சி கிடைக்காத நிலையில் ஸ்கூட்டர் மீது மோதிய காரை கண்டு பிடிப்பதில் சிக்கல் ஏற்பட்டது. ஓங்கூர் சுங்கச்சாவடி சிசிடிவியை ஆய்வு செய்ததில் அரவிந்த் கார் விழுப்புரம் நோக்கி சென்ற உடனே சென்னை திரும்பியது தெரிய வந்தது. தொலைபேசி மூலம் அரவிந்தை தொடர்பு கொண்டு விசாரித்த போலீசார், விபத்து ஏற்படுத்தியதை உறுதி செய்தனர்.

32 வயதான அரவிந்த் ரவிச்சந்திரனை ஒலக்கூர் காவல் நிலையம் வரவழைத்த போலீசார், அவரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். விபத்தை ஏற்படுத்திய அரவிந்த் ரவிச்சந்திரனின் ஆடி காரையும் போலீசார் பறிமுதல் செய்தனர்.

## தூத்துக்குடி மாநகராட்சி சொத்து வரி உயர்வு நோட்டீஸுக்கு தடை

மதுரை, மார்ச்.12

தூத்துக்குடி மாநகராட்சியில் 2024 2025 ஆண்டுக்கான உயர்த்தப்பட்டுள்ள சொத்து வரி நோட்டீஸுக்கு உயர்நீதி மன்ற மதுரை கிளை இடைக்காலதடை விதித்தது. வழக்கு தொடர்பாக தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் விரிவான பதில் மனு தாக்கல் செய்ய உத்தரவிட்ட நீதிமன்றம் நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகளின் படி 5 ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமே சொத்து வரிகளை மறுசீரமைப்பு செய்ய வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது. சொத்து வரி உயர்த்தி வழங்கப்பட்ட நோட்டீஸ்க்கு தடை விதித்து ரத்து செய்ய வேண்டும் என முருகன்என்பவர்வழக்கு தொடர்ந்திருந்தார்.

## இரட்டை என்ஜின் ஆட்சி எவ்வளவு மோசமாக உள்ளது என்பதை இந்தியாவுக்கே அம்பலப்படுத்தி உள்ளது மணிப்பூர் :திருப்பூர் எம்.பி. சுப்பராயன் உரை

டெல்லி, மார்ச்.12

மணிப்பூர் பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டியது ஒன்றிய பாஜக அரசுதான் என திருப்பூர் எம்.பி. சுப்பராயன் தெரிவித்துள்ளார். மக்களவையில் பேசிய திருப்பூர் எம்.பி. சுப்பராயன், “இரட்டை என்ஜின் ஆட்சி எவ்வளவு மோசமாக உள்ளது என்பதைஇந்தியாவுக்கே அம்பலப்படுத்தி உள்ளது மணிப்பூர்.மணிப்பூரை கலவர பூமியாக மாற்ற யார் காரணமாக இருந்தார்களோ, அவர்கள்தான்அதை சரி செய்ய வேண்டும். எனவே. இரு தரப்பு மக்களையும் அழைத்துப் பேசி தீர்வு ஏற்படுத்த வேண்டியது ஒன்றிய பாஜக அரசின் கடமை.



நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான தொகுதி மேம்பாட்டு நிதியை ரூ.18 கோடியாக உயர்த்த வேண்டும். 6 சட்டமன்ற தொகுதிகளை உள்ளடக்கிய மக்களவை தொகுதி மேம்பாட்டுக்கு ரூ.5 கோடியை மட்டுமே ஒன்றிய அரசு வழங்குகிறது. ஆனால் ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் ரூ.3 கோடி மேம்பாட்டு நிதியாக தமிழ்நாடு அரசு வழங்குகிறது. தமிழ்நாட்டை குறி வைத்து அடிக்கும் பாஜக ஆட்சியாளர்கள், தொகுதி மேம்பாட்டு நிதியை ஏன் உயர்த்தவில்லை?. ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம் வேண்டாம். அந்நியச் செலாவணியை அதிகளவில் ஈட்டித்தரும் திருப்பூருக்கு சிறப்பு நிதியை ஒதுக்க வேண்டும்,”

இவ்வாறு தெரிவித்தார்.

## “கோயில் திருவிழாக்களில் பங்கேற்க ஒவ்வொரு பிரிவினருக்கும் உரிமை உள்ளது” : சென்னை உயர்நீதிமன்றம் அதிரடி

சென்னை , மார்ச்.12

“கோயில் திருவிழாக்களில் பங்கேற்க ஒவ்வொரு பிரிவினருக்கும் உரிமை உள்ளது” என்று சென்னை உயர்நீதி மன்றம் தெரிவித்துள்ளது. நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூரை அடுத்த ஜமீன் இளம்பிள்ளை என்னுமிடத்தில் உள்ளா மகா மாரியம்மன் கோவில் மாசி திருவிழா நடத்தக் கோரி பாரத் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார், இந்த வழக்கு இன்று சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி பரத சக்கரவர்த்தி அமர்வில் விசாரணைக்கு வந்த போது, ஆண்டுதோறும் அமைதிப் பேச்சு நடத்தப்பட்டு திருவிழா நடத்தப்படுவதாகவும் மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.





இதைத் தொடர்ந்து நீதிபதி அமர்வு பிறப்பித்த உத்தரவில், “ஒவ்வொரு ஆண்டும் அமைதிப் பேச்சு நடத்த வேண்டிய அவசியமில்லை. கடவுள் முன் எந்த பாகுபாடும் இருக்கக் கூடாது. தங்கள் தலைமையில் தான் கோவில் திருவிழா நடத்தப்பட வேண்டும் என எந்த சாதியினரும் உரிமை கோர முடியாது. கோயில் திருவிழாக்களில் பங்கேற்க ஒவ்வொரு பிரிவினருக்கும் உரிமை உள்ளது.

எந்த பிரிவினருக்கும் முன்னுரிமை வழங்காமல் திருவிழாவை நடத்த வேண்டும். அறநிலையத் துறை அதிகாரிகள் திருவிழாவை நடத்த வேண்டும்,” இவ்வாறு தெரிவித்து வழக்கை முடித்து வைத்தனர்

## ராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் மாவட்ட ஆட்சியர் ஆய்வு

ராமநாதபுரம், மார்ச்.12

இலங்கை கச்சதீவில் மார்ச்14,15 ஆகிய 2 நாட்கள் நடைபெறும் திருவிழாவில் ராமேஸ்வரம் மீன் பிடி துறைமுகத்தில் இருந்து 3 ஆயிரத்துக்கும் அதிகமான பக்தர்கள் பங்கேற்கின்றனர். திரு விழாவை முன்னிட்டுராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் நடை பெற்று வரும் முன்னேற்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையில் ஆய்வு நடைபெற்றது.



## இன்சூரன்ஸ் நிறுவன நிலம் எடுப்பு நோட்டீஸ் ரத்து

மெட்ரோ ரயில் நிலையத்துக்காக இன்சூரன்ஸ் நிறுவன நிலத்தை கையகப்படுத்துவது பற்றிய நோட்டீசை ஐகோர்ட் ரத்து செய்து. ராயப்பேட்டை ஒயிட்ஸ் சாலை ரத்தின விநாயகர், துர்க்கை அம்மன் கோயில் ராஜ கோபுரத்தை இடிக்க எதிர்ப்பு தெரிவித்து வழக்கு தொடரப்பட்டது. ஆலயம் காப்போம் கூட்டமைப்பு சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவன 837 ச.மீ. நிலத்தை கையகப்படுத்தல் பற்றி விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்பட்டது. இந்த வழக்கு இன்று விசாரணைக்கு வந்த போது; ஏற்கனவே முன் அனுமதி பெற்று ரூ.200 கோடியில் இன்சூரன்ஸ் நிறுவனம் கட்டுமானங்கள் மேற்கொண்டுள்ளது என தெரிவித்த நீதிபதி, பாதுகாப்பு, வசதி மற்றும் தொழில்நுட்ப காரணங்களுக்காக மெட்ரோ ரயில் நிலைய திட்டத்தில் மாற்றம் செய்யப்படவில்லை. பழையபடி கோவில் முன் மெட்ரோ ரயில் நிலையம் அமைத்துக் கொள்ளலாம் எனவும் தெரிவித்துள்ளார்

## தமிழகத்தில் சமூக நலத்துறையில் இருந்து பிரித்து மகளிர் மேம்பாட்டுக்கென தனித்துறையை ஏன் உருவாக்க கூடாது?: உயர்நீதிமன்றம்



சென்னை, மார்ச்.12

தமிழகத்தில் சமூக நலத்துறையில் இருந்து பிரித்து மகளிர் மேம்பாட்டுக்கென தனித்துறையை ஏன் உருவாக்க கூடாது? என்று உயர்நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது. கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் உள்ள அரசு ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் பெண் மருத்துவ அதிகாரி ஒருவர் கடந்த 202 இல் பாலியல் தொல்லைக்கு உள்ளானார். இது தொடர்பாக அவர் கல்லூரி முதல்வரிடமும் மற்றும் காவல் துறையிடமும் புகார் அளித்தார். ஆனால் அதன்மீது கல்லூரி நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவில்லை. மாறாக வேறொரு ஊழியர் மூலம் பொய் புகார் பெற்று, பாலியல் புகார் கூறிய பெண் மருத்துவஅதிகாரியையே, சஸ்பெண்ட் செய்தார் கல்லூரி முதல்வர்.

இதையடுத்து சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் பாதிக்கப்பட்ட அந்த பெண் மருத்துவ அதிகாரி மனு தாக்கல் செய்தார். அதில், "பாலியல் புகார் அளித்த என் மீது தவறான குற்றச்சாட்டில் கல்லூரி முதல்வர் சஸ்பெண்ட் செய்துள்ளார். அவரது உத்தரவை ரத்து செய்ய வேண்டும். மீண்டும் என்னை பணியில் அமர்த்தி, எனக்கான பணிக்கொடைகளை பெற்றுத்தர வேண்டும்" என்று கோரியிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்து இடைநீக்கம் செய்ததில் முகாந்திரம் இல்லை என்று கூறி இடைநீக்க உத்தரவை ரத்து செய்தார் நீதிபதி. இந்த வழக்கு மீண்டும் நீதிபதி மஞ்சுளா அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது அரசு தலைமை குற்றவியல் வழக்கறிஞர் தரப்பில், "பாலியல் புகார்கள் மீது சிறப்பு கவனத்துடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பெண்கள் பணிபுரியும் அரசு, தனியார் நிறுவனங்களில் இதுவரை 36,000 உள்புகார்கள் குழு அமைக்கப்பட்டுள்ளது, "இவ்வாறு தெரிவித்தார். இதனை பதிவு செய்து கொண்ட நீதிபதி, "தமிழ்நாட்டில் சமூக நலத்துறையில் இருந்து பிரித்து மகளிர் மேம்பாட்டுக்கு தனித்துறையை உருவாக்க அரசுக்கு பரிந்துரை அளிக்கிறோம். அரசு துறைகளில் பணி நியமனம், பதவி உயர்வுக்கு, பாலியல் உணர்திறன் பாடத்தில் தேர்ச்சியை கட்டாயமாக்க வேண்டும். அடிப்படை பணி முதல் உயர் நிர்வாக பொறுப்பில் உள்ளவர்கள் வரை பாலியல் உணர்திறன் பயிற்சி அளிக்க வேண்டும். இது குறித்து அரசு துறை செயலாளர்களுடன் கலந்து பேசி அவற்றை செயல்படுத்த வேண்டும்,"இவ்வாறு தெரிவித்து வழக்கு விசாரணையை ஏப்ரல் 15ம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

## நாட்றம்பள்ளி அருகே வீட்டின் பின்பக்க ஜன்னலை உடைத்து பீரோவில் வைத்திருந்த 46 சவரன் தங்க நகைகள், 10 லட்சம் ரூபாய் ரொக்கம் மற்றும் வெள்ளிப் பொருட்களை மர்ம நபர்கள் கொள்ளை

வாணியம்பாடி, மார்ச்.12

திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம்பள்ளி அடுத்த அக்ராகரம் ஊராட்சிக்கு உட்பட்ட ஓம் சக்தி நகர் பகுதியைச் சேர்ந்தவர் முத்து(வயது 35).இவர் ஆட்டு வியாபாரம் செய்து வருகின்றார்.

இவருக்கு ரமணாவதி என்ற மனைவியும் ஒரு பெண் பிள்ளை உள்ள நிலையில் இரண்டாவதாக ஆண் குழந்தை பிறந்து ள்ளதால் அவர் அவரது தாயார் வீட்டில் உள்ளார்.

நேற்று இரவு முத்து வீட்டை பூட்டிவிட்டு அவரது மாமியார் வீட்டிற்கு சென்றுள்ளார். இதனை நோட்டமிட்ட மர்ம நபர்கள் வீட்டின் பின்பக்கத்தில் உள்ள ஜன்னலை கடப்பாரை மற்றும் மர கோடளியால் வெட்டி உள்ளே புகுந்து பீரோவில் வைத்திருந்த 46 சவரன் தங்க நகைகள், 10 லட்சம் ரூபாய் ரொக்க பணம் மற்றும் வெள்ளி பொருட்களை மர்ம நபர்கள் கொள்ளை அடித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

காலை வீட்டிற்கு வந்த முத்து பின்பக்க ஜன்னல் உடைத்திருப்பதை கண்டு அதிர்ச்சடைந்து உள்ளே சென்று பார்த்த போது பணம் மற்றும் நகைகள் கொள்ளை போனது தெரியவந்தது.

சம்பவம் குறித்து முத்து நாட்றம்பள்ளி காவல்துறையினருக்கு தகவல் கொடுத்துள்ளார்.



தகவலின் பேரில் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற ஏடிஎஸ்பி கோவிந்தராசு, மற்றும் நாட்றம்பள்ளி காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் ஆட்டு வியாபாரி முத்து காவல்துறையிடம் எப்படியாவது எங்கள் நகைகள் மற்றும் பணத்தை மீட்டு தாருங்கள் என கதறி அழுத சம்பவம் அப்பகுதி மக்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

## பவுர்ணமி, வார இறுதி நாட்களை முன்னிட்டு சிறப்பு பேருந்துகள் இயக்கம்: போக்குவரத்துக் கழகம் அறிவிப்பு

சென்னை, மார்ச்.12

பவுர்ணமி, வார இறுதி நாட்களை முன்னிட்டு சிறப்பு பேருந்துகள் இயக்கபடும் என்று போக்குவரத்துக் கழகம் அறிவித்துள்ளது. மார்ச் 13,14,15,16 ஆகிய தேதிகளில் தினசரி இயக்கப்படும் பேருந்துகளுடன் கூடுதலாக சிறப்பு பேருந்துகள் இயக்கபடும். மார்ச் 13ல் பவுர்ணமியை ஒட்டி சென்னையில் இருந்து திருவண்ணாமலைக்கு 350 சிறப்பு பேருந்துகளும் கிளாம்பாக்கத்தில் இருந்து மார்ச் 14ல் 270 பேருந்துகளும், 15ம் தேதி 275 பேருந்துகளும் இயக்க திட்டமிட்டுள்ளது

## சென்னை மருத்துவ கல்லூரி மாணவர் விடுதி அறைகளில் சிக்கிய கஞ்சா; பயிற்சி மருத்துவர்கள் 3 பேர் கைது

சென்னை, மார்ச்.12

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம் எதிரில் அரசு மருத்துவக்கல்லூரி மாணவர்களின் விடுதி உள்ளது. இதில் ஏராளமான மருத்துவ மாணவர்கள் பயிற்சி மருத்துவர்கள் தங்கி பயின்று வருகின்றனர்.

இதையடுத்து அந்த விடுதியில் கஞ்சா புழக்கம் இருப்பதாக சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனை முதல்வர் தேரணி ராஜன் காவல்நிலையத்தில் புகார் அளித்தார்.

புகாரின் அடிப்படையில் மாணவர் விடுதியில் போலீசார் சோதனை மேற்கொண்டனர். இச்சோதனையில் கேட்டமைன், கஞ்சா ஆகியவற்றை போலீசார் பறிமுதல் செய்தனர். விடுதியில் தங்கியிருக்கும் சில பயிற்சி மருத்துவர்கள் இதை பயன்படுத்தி வந்தது போலீசார் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதுதொடர்பாக பயிற்சி மருத்துவர்கள் மூவரை போலீசார் கைது செய்தனர்.

மேலும் தப்பியோடிய 2 பேரை தேடி வருகின்றனர். போதைப்பொருள் விநியோகம் செய்தது குறித்த விசாரணையில் சைதாப்பேட்டையைச் சேர்ந்த ரோட்னி ரோட்ரிகோ என்பவரை போலீசார் கைது செய்துள்ளனர். அவரிடம் இருந்து 1.4 கிலோ கிரீன் கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

மேலும் இதுகுறித்து போலீசார் விசாரணையை தீவிரப்படுத்தி வருகின்றனர்.

## சென்னையில் கேஸ் கசிவால் தீ விபத்து - 3 பேர் பலி



சென்னை, மார்ச்.12


சென்னை கோவிலம்பாக்கத்தில் 5ஆம் தேதி கேஸ் கசிந்த விபத்தில் தந்தை, மகள், பேரன் என 3 பேர் உயிரிழந்தனர். முனுசாமி என்பவரும் அவரது மகள் சாந்தி, பேரன் ஹரிஹரன் என 3 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். அடுப்பை பற்ற வைத்த போது தீப்பற்றியதாக உயிரிழக்கும் முன்பு எழும்பூர் மாஜிஸ்திரேட்டிடம் வாக்குமூலம் அளித்திருந்தனர். பலத்த தீக்காயமுற்ற ராணி என்பவருக்கு கே.எம்.சி. அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

## கோயில் திருவிழாவில் பங்கேற்க ஒவ்வொரு பிரிவினருக்கும் உரிமை உள்ளது: சென்னை உயர்நீதிமன்றம் கருத்து

சென்னை, மார்ச்.12

கோயில் திருவிழாவில் பங்கேற்க ஒவ்வொரு பிரிவினருக்கும் உரிமை உள்ளது என்று சென்னை உயர்நீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது. தங்கள் தலைமையில் தான் கோவில் திருவிழா நடத்தப்பட வேண்டும் என எந்த சாதியினரும் உரிமை கோர முடியாது பரமத்தி வேலூரை அடுத்த ஜமீன் இளம்பிள்ளை மாரியம்மன் கோவில் மாசிதிருவிழா நடத்தக் கோரி பாரத் என்பவர் வழக்கு தொடர்ந்தார். ஒவ்வொரு ஆண்டும் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய அவசியமில்லை என்று நீதிபதி பரத சக்ரவர்த்தி கூறியுள்ளார்.

## செல்வராகவனின் 7ஜி ரெயின்போ காலனி 2 படப்பிடிப்பு அப்டேட்




இளைஞர்கள் கொண்டாடும் படங்களை இயக்குபவர் செல்வராகவன். 2004 ம் ஆண்டில் ரவி கிருஷ்ணாசோனியா அகர்வால் நடிப்பில் இவர் இயக்கிய '7ஜி ரெயின்போ காலனி' படம் மிகப்பெரிய வெற்றி பெற்றது. இப்படத்தில் இடம் பெற்ற 'கண்பேசும் வார்த்தைகள்' , 'கனா காணும் காலங்கள்' உள்ளிட்ட பாடல்கள் ரசிகர்களை கவர்ந்தன.

19 ஆண்டுகளுக்கு பிறகு '7ஜி ரெயின்போ காலனி' 2ம் பாகத்துக்கான பட வேலைகள்நடைபெற்றுவருகிறது..முதல்பாகத்தைஇயக்கியசெல்வராகவனே 2ம் பாகத்தையும் இயக்குகிறார். முதல் பாகத்தில் நடித்த ரவி கிருஷ்ணா 2ம் பாகத்திலும் நாயகனாக நடிக்கிறார்.

புத்தாண்டை முன்னிட்டு இப்படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியானது. 19 ஆண்டுகளுக்கு பிறகு 7ஜி ரெயின்போ காலனி படத்தின் 2ம் பாகம் வெளியாக உள்ளதால் ரசிகர்கள் மகிழ்ச்சியில் உள்ளனர். அனஸ்வரா ராஜன் கதாநாயகியாக நடிக்கிறார். இப்படத்தினை ஸ்ரீ சூர்யா மூவிஸ் நிறுவனம் தயாரிக்கிறது. யுவன் சங்கர் ராஜா இதற்கு இசையமைக்கிறார். ராம்ஜி இதன் ஒளிப்பதிவு பணிகளை மேற்கொள்கிறார்.

இந்த படத்தின் படப்பிடிப்புகள் ஏற்கனவே சத்தமே இல்லாமல் தொடங்கி விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. அதன்படி இன்னும் இரண்டு வார படப்பிடிப்புகள் மட்டுமே மீதம் இருப்பதாகவும் விரைவில் இதன் ஒட்டுமொத்த படப்பிடிப்பும் நிறைவடைந்து விடும் எனவும் சொல்லப்படுகிறது. இதற்கிடையில் இந்த படத்தின்பர்ஸ்ட் லுக் போஸ்டர் கடந்த ஜனவரி மாதம் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்ப்பை அதிகப்படுத்தியது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஓ.டி.டியில் வெளியானது சம்யுக்தா விஜயனின் "நீல நிறச் சூரியன்"

"நீல நிறச் சூரியன்" படத்தின் சிறப்பம்சமே தமிழ் சினிமாவில் முதன்முறையாக சம்யுக்தா விஜயன் என்கிற ஒரு திருநங்கை இயக்கி நடித்துள்ள முதல் திரைப்படம் என்பது தான். ஒரு பள்ளியில் பிசிக்ஸ் ஆசிரியருக்கு சிறுவயது முதலே தான் ஆண் இல்லை பெண் என உணர்ந்து ஒரு கட்டத்தில் சிகிச்சை மூலம் பெண்ணாக மாற முடிவு எடுக்கிறார். இந்த சமூகம் அவரை எப்படி பார்க்கிறது? அவரது முடிவுக்கு பின் அவர் எதிர்கொண்ட பிரச்சனை என்ன? என்பதை மிக ஆழமாக கூறுகிறது படம்.

"ஒரு ஆண் பெண்ணாக மாற விரும்புவது குறித்து மட்டுமில்லாமல் நம் சமுதாயம் எப்படி அவர்களை பார்க்கிறது? எப்படி அதை கடந்து இவர்கள் சாதிக்கிறார்கள் என்பதை எந்தவிதமான நாடகத்தன்மையும் இல்லாமல் கொடுக்க விரும்பினேன்" என்கிறார் திருநங்கை சம்யுக்தா விஜயன். இப்படத்தில் சம்யுக்தா விஜயன், கீதா கைலாசம், கஜராஜ், மஷாந்த் ஆகியோர் நடித்திருக்கிறார்கள். ஸ்டீவ் பெஞ்சமின் இசை, ஒளிப்பதிவு மற்றும் எடிட்டிங் ஆகிய மூன்று பொறுப்புகளையும் மிகச்சிறப்பான முறையில் வெளிப்படுத்தியிருக்கிறார். பர்ஸ்ட் காப்பி புரொடக்ஷன் சார்பில் மாலா மணியன் இந்தப்படத்தை தயாரித்திருக்கிறார்.

'நீல நிறச் சூரியன்' வெளியாவதற்கு முன்பாகவே சர்வதேச இந்திய திரைப்பட விழா, கிளாஸ்கோ திரைப்பட விழா உள்ளிட்ட திரைப்பட விழாக்களில் பங்கேற்று பாராட்டை பெற்றுள்ளது.

இந்நிலையில் "நீல நிறச் சூரியன்" திரைப்படம் தற்பொழுது ஆஹா ஓடிடி தளத்தில் வெளியாகியுள்ளது.

## சிம்புவின் எஸ்டிஆர் 51 படப்பிடிப்பு குறித்து அஸ்வத் மாரிமுத்து கொடுத்த அப்டேட்!

தமிழ் திரையுலகின் முன்னணி நடிகர்களில் ஒருவர் சிம்பு. இவர் தற்போது இயக்குனர் மணி ரத்னம் இயக்கியுள்ள "தக் லைப்" படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். இப்படம் விரைவில் வெளியாக உள்ளது. இதற்கிடையில், நடிகர் சிம்புவின் பிறந்தநாளை முன்னிட்டு அவர் நடிக்கும் 3 புதிய திரைப்படங்களின் அறிவிப்புகள் வெளியாகின. அந்த வகையில், அடுத்ததாக சிம்பு 'பார்க்கிங்' திரைப்பட இயக்குநர் ராம்குமார் பாலகிருஷ்ணன் இயக்கத்தில் 'எஸ்டிஆர் 49' படத்திலும், தேசிங்கு பெரியசாமி இயக்கத்தில் 'எஸ்டிஆர் 50' திரைப்படத்திலும் நடிக்க உள்ளார். அதனைதொடர்ந்து, 'ஓ மை கடவுளே', 'டிராகன்' போன்ற படங்களை இயக்கி உள்ள இயக்குனர் அஸ்வத் மாரிமுத்து இயக்கத்தில் நடிக்க உள்ளார். இப்படத்திற்கு தற்காலிகாக 'எஸ்டிஆர் 51' என பெயரிடப்பட்டிருந்த நிலையில், படத்தின் டைட்டில் அறிவிப்பு போஸ்டரை படக்குழு வெளியிட்டுள்ளது. இப்படத்துக்கு 'காட் ஆப் லவ்' எனப் பெயரிடப்பட்டுள்ளது. ஏஜிஎஸ் நிறுவனம் தயாரிக்கும் இத்திரைப்படம் கோடை விடுமுறையின்போது வெளியாகும் என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் அஸ்வத் மாரிமுத்து சமீபத்தில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில், " 'எஸ்டிஆர் 51' திரைப்படத்தின் படப்பிடிப்பு 2025 ஆகஸ்ட் அல்லது செப்டம்பர் மாதத்தில் தொடங்கும். 2026ல் வெளியாகும்" என்று அப்டேட் கொடுத்துள்ளார். மேலும், "சிம்பு என்னுடைய படத்தில் நடிப்பதை விட அவரை நான் நிறைய படங்களில் பார்க்க விரும்புகிறேன். 'எஸ்டிஆர் 51' ஸ்கிரிப்ட் பணிகள் ஏற்கனவே முடிந்து விட்டது. திரைக்கதை, வசனம் எழுதும் பணிகள் மட்டும் இருக்கிறது. இந்த படம் ஓ மை கடவுளே, டிராகன் ஆகிய படங்களில் உங்களுக்கு என்ன பிடித்ததோ அது இருக்கும். சிம்புவிடம் நீங்கள் எதையெல்லாம் ரசித்தீர்களோ அதுவும் இருக்கும்" என்று தெரிவித்துள்ளார்.

## மகளிர் பிரீமியர் லீக்: குஜராத்தை வீழ்த்தி மும்பை வெற்றி



மகளிர் பிரீமியர் லீக் தொடரில் மும்பையில் நடைபெற்ற 19வது லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் குஜராத் ஜெயன்ட்ஸ் அணிகள் மோதின. இதில் டாஸ் வென்ற குஜராத் பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி முதலில் பேட்டிங் செய்த மும்பை அணியின் தொடக்க வீராங்கனைகளாக ஹேய்லி மேத்யூஸ் அமெலியா கெர் களமிறங்கினர்.

இதில் அமெலியா கெர் 5 ரன்களில் ஆட்டமிழந்தார். பின்னர் ஜோடி சேர்ந்த மேத்யூஸ் நாட் ஸ்கைவர் பிரண்ட் சிறிது நேரம் பார்ட்னர்ஷிப் அமைத்து அணிக்கு வலு சேர்த்தனர். இவர்களில் மேத்யூஸ் 27 ரன்களிலும், நாட் ஸ்கைவர் பிரண்ட் 38 ரன்களிலும் ஆட்டமிழந்தனர். அதிரடியாக விளையாடிய ஹர்மன்ப்ரீத் கவுர் 54 ரன்களில் ஆட்டமிழந்தார். 20 ஓவர்கள் முடிவில் மும்பை 6 விக்கெட்டுகளை இழந்து 179 ரன்கள் குவித்தது.

இதனையடுத்து 180 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி குஜராத் களமிறங்கியது. இறுதியில் குஜராத் அணி வெற்றிக்கு கடைசி இரண்டு ஓவர்களில் வெற்றிபெற 22 ரன்கள் தேவை என்ற நிலை ஏற்பட்டது. இதில் கன்வர் 10 ரன்களிலும், சிம்ரன் ஷேக் 18 ரன்களிலும் ஆட்டமிழக்க, குஜராத் அணி 20 ஓவர்கள் முடிவில் அனைத்து விக்கெட்டுகளை இழந்து 170 ரன்களில் ஆல் அவுட்டானது. இதன்மூலம் மும்பை அணி 9 ரன்கள் வித்தியாசத்தில் குஜராத்தை வீழ்த்தி வெற்றியைப் பதிவுசெய்தது.

## கவாஸ்கர் தனது நாவை கட்டுப்படுத்த வேண்டும் பாக்.முன்னாள் கேப்டன் பதிலடி



9வது ஐ.சி.சி. சாம்பியன்ஸ் டிராபி தொடரில் நியூசிலாந்தை வீழ்த்தி இந்தியா சாம்பியன் பட்டம் வென்றது. இந்த தொடர் முதலில் பாகிஸ்தானில் மட்டுமே நடைபெறுவதாக இருந்தது. ஆனால் பாதுகாப்பு பிரச்சினை காரணங்களுக்காக இந்திய அணி பாகிஸ்தான்செல்லமறுத்ததால்இந்தியஅணிக்குரியஆட்டங்கள் அனைத்தும் துபாயில் நடைபெற்றது. இதில் விளையாடிய அனைத்து போட்டிகளிலும் வெற்றி பெற்ற இந்தியா தோல்வியே சந்திக்காமல் கோப்பையை கைப்பற்றியது.

இந்த தொடரில் நடப்பு சாம்பியனாக களமிறங்கிய பாகிஸ்தான் அணி ஒரு வெற்றி கூட பெறாமல் தனது பிரிவில் (ஏ பிரிவு) கடைசி இடம் பிடித்து பரிதாபமாக வெளியேறியது. இதனால் அந்தஅணியைஅந்நாட்டின்பலமுன்னாள்வீரர்கள்விமர்சித்தனர். மேலும் நடப்பு தொடரில் பரம எதிரியான இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்திலும் மோசமான தோல்வியை தழுவியது. இதனால் தற்போதைய பாகிஸ்தான் அணியை இந்திய பி அணியே எளிதில் தோற்கடிக்கும் என்று இந்திய முன்னாள் வீரர் சுனில் கவாஸ்கர் விமர்சித்திருந்தார்.

இந்நிலையில் கவாஸ்கர் பாகிஸ்தானை பற்றி இவ்வாறு பேசாமல் நாக்கை அடக்கி வைக்க வேண்டும் என்று அந்த அணியின் முன்னாள் கேப்டன் இன்சமாம்உல்ஹக் பதிலடி கொடுத்துள்ளார்.

இது பற்றி அவர் பேசியது பின்வருமாறு: "இந்தியா போட்டியில் வெற்றி பெற்றது. அவர்கள் நன்றாக விளையாடினார்கள். ஆனால் மிஸ்டர் கவாஸ்கர் புள்ளி விவரங்களை பார்க்க வேண்டும். ஒருமுறை அவர் பாகிஸ்தானுக்கு எதிராக விளையாடுவதில் இருந்து தப்புவதற்காக ஷார்ஜாவுக்கு பறந்தார். அவர் எங்களை விட வயதானவர் சீனியர். நாங்கள் அவரை மிகவும் மதிக்கிறோம். ஆனால் அவர் எங்களுடைய நாட்டை பற்றி இவ்வாறு பேசக்கூடாது.

உங்களது அணியை தேவையான அளவுக்கு பாராட்டுங்கள். ஆனால் மற்ற அணிகளை இவ்வாறு பேசுவது நல்லதல்ல. கவாஸ்கரை புள்ளி விவரங்களை பார்க்க சொல்லுங்கள். அவருக்கு பாகிஸ்தான் எங்கே இருக்கிறது என்று தெரியும். நான் அவருடைய கருத்தால் ஆழமான காயத்தை சந்தித்தேன். அவர் சிறந்த மரியாதைக்குரிய கிரிக்கெட்டர். ஆனால் இது போன்ற கருத்துகளை தெரிவிப்பதால் அவர் தனது மதிப்பை குறைத்துக் கொள்கிறார். அவர் தன்னுடைய நாவை கட்டுப்படுத்த வேண்டும்" என்று கூறினார்.

**NAMADHU DHINA KANI**
**Canara Bank**
**Account: 120028528266**
**IFSC code: CNRB0001041**

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.